மானாமதுரை பேரூராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வைக்கோல் விற்பனை நிலையத்தையும் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தி, நவீனப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகம் ஆய்வு செய்யப்பட்டு, அங்கே 10 ஆயிரம் கால்நடை அலகுகளுக்கு மேல் இருந்தால்தான் அதைத் தரம் உயர்த்த முடியும். எனவே, 10 ஆயிரம் அலகுகளுக்கு மேல் இருந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தித் தரும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

384—

விற்பனை நிலையம்

***36202—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று முதுகுளத்தூர் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தினைச் சுற்றி மிகச் சிறிய அளவிலான துணிக் கடைகளே உள்ளன. இக்கடைகளில் தினமும் ரூ.1,000/-த்திற்கும் குறைவாக விற்பனை நடைபெறுகிறது. மேலும், முதுகுளத்தூருக்கு அருகில் 22 கிலோ மீட்டர் தொலைவில் பரமக்குடியிலும், 40 கிலோ மீட்டர் தொலைவில் இராமநாதபுரத்திலும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இயங்கி வருகின்ற நிலையில், முதுகுளத்தூரில் விற்பனை நிலையம் இலாபகரமாக இயங்க வாய்ப்பில்லை என்ற சூழ்நிலையில், முதுகுளத்தூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க தற்சமயம் உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிற்கு அன்னை தெரசா; அகிம்சைக்கு அண்ணல் காந்தி; அறிவிற்கு அறிஞர் அண்ணா; அருள் கொடைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; இவை அனைத்திற்கும் மாண்புமிகு அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முதுகுளத்தூர் தொகுதியில், முதுகுளத்தூர், கமுதி, சாயல்குடி போன்ற 3 பேரூராட்சிகளில் காதி கிராப்ட் ஒரு காலத்தில் நன்கு செயல்பட்டு வந்தது. அது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூடு விழா கண்டது. தற்போது முதுகுளத்தூர் பகுதி மக்கள், திருமணம் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஆடைகள் வாங்குவதற்கு இராமநாதபுரத்தில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் கடைக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. சுமார் கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் தொலைவிற்குப் பயணம் செய்யக்கூடிய நிலை

உள்ளது. தற்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளது. வருங்காலத்தில் தொகுதியினுடைய தலைமை இடமான முதுகுளத்தூரில் ஒரு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மைதான். முதுகுளத்தூர், சாயல்குடி, கமுதி போன்றவை பேரூராட்சிப் பகுதிகள். அதைச் சுற்றி கிராமங்கள் நிறைந்த பகுதிகள் உள்ளன. ஏற்கெனவே அப்பகுதியில் காதி விற்பனை நிலையம் இருந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அப்பகுதி, கிராமங்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால், அங்கே கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பேரூராட்சிப் பகுதிக்குட்பட்ட இடத்தில் குறைந்த வாடகையில் ஒரு கட்டடம் எடுத்துத் தர முன்வருவாரேயானால், மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலும், நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய வகையிலும், அப்பகுதியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறை ரீதியாக நேரடியாகச் சென்று, ஆய்வு செய்து முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த